475

Regd. No. M. 1530

BALAVINODINI

OR

THE CHILDREN'S FRIEND

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol IV] February 1922 [No. 2

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
SRI BALASUBRAMANYAM & Co.,
Royapettah P. O., MADRAS.

Annual Subscription Inland Rs. 1—8
" " Foreign Rs. 2—0

8 JAN 1924

BALAVINODINI

The Children's Friend

Yearly Subscription Rs. 1—8—0; Foreign Rs. 2.

I Vol. 1919 Calico Gold Gilt bind	...	Rs. 2 0 0
II Vol. 1920 Do.	...	Rs. 2 0 0
III Vol. 1921 Do.	...	Rs 2 0 C

To the Subscribers of Bala Vinodini each Rs. 1-12-0.

N.B.—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

ENGLISH NOVELS

G. W. M. Reynold's

BOLD TYPE EDITIONS.

No.	Title	Rs.	A.
1.	Ellen Percy 8 vols.	5	0
2.	Mary Price, 8 vols	5	0
3.	Young Duchess 4 vols.	3	0
4.	Rosa Lambert, 4 vols.	3	0
5.	Loves of the Harem, 4 vols.	3	0
6.	Margaret, 4 vols.	3	0
7.	The Massacre of Glenco, 4 vols.	3	0
8.	The Virgin's Kiss 4 vols.	3	0
9.	Canonbury House 3 vols.	2	4
10.	Mysteries of Old London 3 vols.	2	4
11.	Pope Joan, 3 vols.	1	12
12.	Soldier's Wife, 2 vols.	1	6
13.	Robert Macaire, 2 vols.	1	4
14.	Grace Darling	0	12
15.	Young Fisherman	0	10
16.	Agnes 9 vols.	6	0
17.	Mary Stuart, 2 vols.	1	4
18.	May Middleton 2 vols.	1	8
19.	Kenneth, 4 vols.	3	0
	MYSTERIES OF PARIS BY EUGENE SUE. 2 vols.	1	0

Manager, **BALAVINODINI OFFICE,**

ROYAPETTAH P. O.

MADRAS.

பாலகனுக் காக பரிந்திலிங் கத்தெழுந்த
நீலகண்டன் கோலம் நினைந்துதொழு நெஞ்சகமே.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 4	1922௵ பிப்ரவரி௴	பகுதி 2

ஈசன் அருள் பெறும் வழி

தடுங்கோள் மனத்தை விடுங்கோள்
வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படியிருங்
கோள் எழுபாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந்
திறக்கத் தொளைக்கவைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே
உமக்கு வெளிப்படுமே.

—கந்தரலங்காரம்.

மந்திரத்தில் விழுமோ மாங்காய் ?

கொண்டா முத்தூரில் கோதண்டபாணி பிள்ளை யென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பயிர்த்தொழில் செய்வதில் மிகவும் சமர்த்தர். அவர் நிலங்கள் பொன் போட்டால் பொன்விளையு மென்று சொல்லும்படியாக அவ்வளவு செழிப்புள்ளதா யிருக்கும். பயிரிடும்பருவத்தில் பார்த்தால் அவை வெகு ரம்யமாக விருக்கும். குடித்தனமோ துரைத்தனமோ என்று பழமொழி வழங்குவ துண்டல்லவா? அது, இவருடைய வேளாண்மைத் திறத்தைக் காணும்போது நன்குவிளங்கும். அந்தப்பக்கங்களில் அநேகர் இவருடைய வேளாண்மையைப் பார்ப்பதற் கென்றே வருவ துண்டு; வந்து தங்களுடைய நிலங்களும் சீர்ப்படும் வழிகளை இவரிடமிருந்து கற்றுக்கொண்டு போவது முண்டு.

ஆனால் இதற்கு மாறாக அவ்வூரில் திண்ணை தூங்கிச் சோம்பேறிகள் சிலரிருந்தார்கள். இவர்களுக்குப் பிதிரார்ச்சித சொத்துக் கொஞ்சமிருந்தது. இதை இவர்கள் ஆடிக்கொருமுறை அமாவாசைக் கொருமுறை போய்ப் பார்ப்பதும் வீட்டிலிருந்து சீட்டாடிக்கொண்டே வேலையாட்களை "அடே உழுதாய் விட்டதா? விதை விதைத்தாய்விட்டதா?" என்று கேட்டுக்கொண்டு மிருப்பார்கள். இவர்களுடைய நிலம் எப்படி

விளையும்? "பார்க்காதபண்டம் பாழ்" என்பதற்கேற்பக்கிராய் மண்டிப்போய் கலம் விதைத்தால் ஆறுமரக்கால் அறுவடையாவதுகூடக் கஷ்டமாய் விடும். இப்படி இவர்களுடைய நிலம் நாளுக்குநாள் நன்னிலமாவதையும் பிள்ளையவர்களின் நிலம் செழித்தோங்கி வருவதையும் கண்ணுற்ற இவர்கள் பொறாமை கொண்டார்கள்.

ஒருமுறை பொறாமைக்கு இடங்கொடுத்து விட்டால் அது சும்மாவிருக்குமா! வேலைசெய்ய ஆரம்பித்தது; ஒருநாள் இவர்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு கூட்டம் கூடிப் பிள்ளையவர்களின் நிலம் நன்றாய் விளைவதற்குக் காரணம் என்ன என்று யோசித்தார்கள். அது இவர்களுடைய யோசனைக்கு எப்படி எட்டும்? யோசனைக்கு ஆதாரமாயிருக்கும் புத்திகூர்மையிருந்தாலல்லவா யோசனை ஓடும். இவர்களுக்குத்தான் சோம்பேறித்தனம் முதிர்ந்து புத்தி உலக்கைக்கொழுந்தா யிருக்கிறதே! ஆகவே நெடுநேரம் யோசித்தும் காரணம் விளங்கவில்லை. கடைசியில் அவர்களில் புத்திசாகரன் என்னும் ஒருபிரகஸ்பதி எழுந்து "இவ்விதமான நமது யோசனையில் இது ஒன்றும் புலப்படாது. அவன் ஏதோ மந்திரம் போடுகிறான். அதனாலே தான் அவன் நம்முடைய நிலத்திலுள்ள சத்துக்களையெல்லாம் தன் நிலத்திற்கு இழுத்துக் கொள்கிறான். அதனாலே தான் நமது நிலம் விளைகிறதில்லை. அவன் நிலம் நன்றாய் விளைகிறது. இதைத்தவிர வேறு ஒரு சூட்சமும் இல்லை. இனி நாம் ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது இவன் மந்திரம்போட்டு எங்கள் நிலங்களை எல்லாம்

விளையாமற் செய்துவிடுகிறான் என்று நாம் அதிகாரி யிடம் பிரியாது செய்து இந்தப் பையலை ஊரைவிட்டே ஓட்டிவிடவேண்டும். அப்பொழுதுதான் நமக்கு க்ஷேமம். புறப்படுங்கள்'' என்றான். எல்லோரும் இது தான் சரி, என்று ஆமோதித்து நீதிபதியிடம் சென்று பிரியாது கொடுத்தார்கள்.

நீதிபதி பிள்ளையவர்களை வரவழைத்து “உம்மீது பிரியாது வந்திருக்கிறது'' என்று பிரியாதைப்படித்துக் காண்பித்து “நீர் என்ன சொல்லுகின்றீர்'' என்று கேட்டார்.

பிள்ளையவர்கள் “நான் வீடுமட்டும்போய்வர உத்தரவாகவேண்டும். வந்ததும் தங்களுடைய கேள்விகளுக்கு உத்தரம்அளிக்கின்றேன்'' என்றார். “அவ்வாறே போய்வருக'' என்று நீதிபதி அநுமதிகொடுத்தார்.

பிள்ளையவர்கள் வீடுபோனதும் தம்மிடமுள்ள சாகுபடி சமான்கள், ஆடுமாடுகள், தம்மக்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு நீதிபதியிடம் வந்து 'பிரபோ' என்னிடம் அவர்கள் பிரியாதில் கூறியபடி மந்திரமும் இல்லை, மாயமும் இல்லை. என்னிடமுள்ள கலப்பை முதலிய சாகுபடி சாமான்களைப் பாருங்கள். எவ்வளவு உறுதியாயிருக்கின்றன. என்னுடைய ஆடுமாடுகளைப் பாருங்கள். எவ்வளவு பலமுள்ளவைகளா யிருக்கின்றன. அவைகளுக்கு நன்றாய் ஊட்டங்கொடுத்துக் காப்பாற்றிவருகின்றேன். இவைகள் வேலைக்கு ஒரு சிறிதும் பின்வாங்கா. என்னுடைய பிள்ளைகளைப் பாருங்கள். எவ்வளவு பலசாலிகளா யிருக்கிறார்கள். நன்றாய்க்

கஷ்டப்பட்டு வேலைசெய்யக் கூடியவர்கள். இவர்களுக்கும் பயிர்த்தொழில் நன்றாய்த் தெரியும்; சோம்பலென்பதே தெரியாது. நான் என் குடும்பத்தோடு என் தோட்டத்தில் அல்லும்பகலும் வேலை செய்கிறேன். பருவகாலத்தில் உழுது, எருப்போட்டு, விதைத்து, நீர் பாய்ச்சிப் பயிர்களுக்குச் சத்துருக்களாகிய களைகளைக் களைந்து ஊக்கத்துடனும் விடாமுயற்சி யுடனும் பண்படுத்திவருகிறேன்; இதனுடன் தான் பார்க்காத பண்டம் பாழ், தான் செய்வது உத்தமம், தம்பி செய்வது மத்திபம், ஆள்செய்வது அதமம் என்கிறபடியால் எல்லா வேலைகளையும் நானே மேற்பார்வை பார்த்துக் கொண்டும் வருகிறேன். இவைகளைத் தவிர வேறு என்னிடம் மந்திரமுமில்லை, ஜாலமும் இல்லை. என்மீதில் பிரியாது செய்தவர்களும் இவ்விதமாகப் பாடுபட்டால் அவர்களுடைய நிலங்களும் நன்றாய் விளையும்" என்றார்.

நீதிபதி பிள்ளையவர்களின் உழைப்புக்கும், ஊக்கத்திற்கும், திறமைக்கும் மெச்சிப் பிரியாது கொண்டு வந்தவர்களாகிய வாதிகளைப்பார்த்து "உங்களிடத்திலுள்ள சாகுபடி சாமான்களையும் ஆடுமாடுகள் முதலியவைகளையும் கொண்டுவாருங்கள்" என்றார். சோம்பேறிகள் கைகளைப் பிசைந்துகொண்டு விழித்தார்கள். இருந்தாலல்லவோ கொண்டுவரப் போகிறார்கள். இஞ்சிதின்ன குரங்குகளைப்போல் விழித்தார்கள். நீதிபதி உடனே கோபங்கொண்டு "ஏ, சோம்பேறிகளே, உங்களுக்கு எப்படி நிலம் விளையும்? பாடுபட்டாலல்லவோ விளையும்! பிள்ளையவர்களைப் பார்த்துப் பொறாமை கொள்வதில் பயன் என்ன? பிரையாசை யில்லாமல் மந்திரத்தில் மாங்காய் விழுமோ? ஒரு போதும் விழாது. ஓர் ஊரில் பிள்ளையவர்களைப்போல் ஒரு குடியிருந்தாலும் போதும். உங்களைப்போல் நூறு சோம்பேறிகள் இருந்தாலும் பிரயோசனமில்லை—" என்று சொல்லி வீண்பிரியாது கொண்டு வந்ததற்காகத் தலைக்கு ரூ 100 அபராதம் விதித்து இனியாவது ஜாக்கிரதையா யிருக்கும்படி எச்சரிக்கை செய்தனுப்பினர்.

குழந்தைகளே! சோம்பேறிகளின் கதி எப்போதும் இப்படித்தான் முடியும்: விடாமுயற்சி யுடன் கண்ணுங் கருத்துமாக விருந்து தங்கள் வேலைகளைச்செய்து வருபவர்கள் பிள்ளையவர்களைப்போல் எப்போதும் மேன்மை யடைவார்கள். சுறு சுறுப்புள்ளவர்களைப் பார்த்துப் பொறாமைப் படுவதில் பிரயோசனமில்லை. இதனால் திருந்தமுடியாது. ஆகையால் நீங்கள் பிள்ளையவர்களைப்போல் எப்போதும் யாவரும் மெச்சும்படி பாடுபடுங்கள். நீங்களும் சுகமடைவீர்கள்.

GREAT MEN THINK ALIKE.

உலகத்தில் பெரியோர்கள் அபிப்பிராயங்கள் ஒரே மாதிரியாயிருக்கின்றன.

எல்லாம் எனையாளும் ஈசன் செயல்.

இதைப்பற்றி ஜோஸப் அடிஸன் (Joseph Addison) என்பவர் ஸ்பெக்டேடர் (Spectator) என்னும் கிரந்தத்தில் பின் வருமாறு எழுதுகிறார்.

"நான் இரவில் படுத்து நித்திரைக்குப் போகும்போது என்னைச் சர்வேசுவரனிடம் ஒப்புவிக்கின்றேன்; தூங்கி எழுந்தவுடன் அவனுடைய உத்தரவுக்கு எதிர்பார்த்து அதன்படி நடக்கின்றேன். அநேக துன்பங்கள் என்னைப் பயமுறுத்தும்போது, நான் அவனுடைய உதவியையே நாடுகின்றேன். அவைகள் என்னுடைய நன்மைக்காக அல்லது தீமைக்காக நேரிடுகின்றன என்பதைப்பற்றி நான் ஒரு சிறிதும் சிந்திப்பதில்லை. நான் எந்த நேரத்தில் எவ்விதமான மரணமடையப்போகிறேன் என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும், அதைப்பற்றி நான் விசாரப்படுவதில்லை. ஏனெனில் எல்லாம் அவனுக்குத் தெரியும்; அந்தச் சந்தர்ப்பங்களில் அவன் எனக்கு வேண்டிய சௌகரியங்களைச்செய்து என்னைக் காப்பாற்றுமவிரான் என்பது நிச்சயம்" அவனன்றி ஓரணுவும் அசையாது.

பணமே குணம்

வேங்கடாசல ஐயரென்னும் பெயருள்ள தனவந்தரொருவரிருந்தார். அவருடைய வீட்டில் வேடிக்கையான விருந்தொன்று நடந்தது. இனத்தோடு இனம் சேருவது இயல்பாதலால் அந்த விருந்துக்கு அவரைப்போன்ற பணக்காரர் அநேகம்பேர் வந்தார்கள். பலவகை பட்சண பலகாரங்களுடன் போஜனத் திருவிழா பலமாய் நடந்தது. வஞ்சனையின்றி அனைவரும் வயிறாரவுண்டார்கள்; சாப்பிட்டது சரிக்க சந்தனக்குழம்பைத் தாராளமாய்ப் பூசிக்கொண்டு, தாம்பூலந் தரித்துச் சல்லாபமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சுப்பையர், சுப்பராமையர், சுப்புராமசந்திர ஐயர், அப்பு ஐயர், அப்பணையர், அபார ஆனந்த ஐயர் என்னும் பிரபுக்கள் ஆறுபேர் மாத்திரம், தங்களுக்கு மற்றவர்கள் கொஞ்சம் இளைத்தவர்களென்று எண்ணி வேறொருபக்கம் தனிக்கூட்டம் போட்டுக்கொண்டிருந்தார்கள்.

இந்த ஆறுபேரில், அபார ஆனந்த ஐயர், கையில் பணமில்லாதவரானாலும், வயிற்றுத்துரோக மட்டும் ஒருவேளையும் செய்தறியார்; வாய் வல்லமையால் பணக்காரர் போலவே நடித்து வந்தார்; எந்த விருந்

தும் தமக்குச் சொந்த மென்றே சொல்லுவார். அது நடக்குமிடம் வெகு தூரத்திலிருந்த போதிலும் அது பற்றி அவர் கவலைப்படவேமாட்டார். தம்மை அழையா விட்டாலும் அழைக்கவில்லையே யென்று அவர் வருத் தமு மடைவதில்லை. நடைக்கும் பின்வாங்குவதில்லை. சாப்பாடும் ஒரு முறைக்குப் பலமுறை கேட்டு வாங்கிச் சாப்பிடுவார். அவருக்குள்ள வருத்த மெல்லாம், சமயங் கிடைக்கும் போது, தமது பேச்சின்படி நடக்கமாட்டே னென்று சொல்லுகிற ஜாண்வயிற்றின்மேலே தான். அந்த வயிற்றை நோக்கிப் பல முறையும் அவர்,

" ஒருநா ளுணவை யொழியென்றால் ஒழியாய்
இருநாளைக் கேலென்றால் ஏலாய்—ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது "—என்று கூறுவார்.

மேற்படி விருந்தில் அவர் லோபத்தனஞ் செய்யா மல் சாப்பிட்ட ஆனந்தத்தால் சோட்டுவாய் விட்டுக் கொண்டே இரண்டு கைகளையும் தலைக்குமேல் தூக்கிக் கொண்டு பின் வருகிறபடி சொல்ல, அதையே ஆதார மாகக் கொண்டு மற்றவர்களும் பேசத் தொடங்கினர் கள். அந்த விசித்திரத்தைக் கேளுங்கள்.

அபார ஆநந்த ஐயர்:—" பணமே குணம் "—

சுப்பையர்:—ஆமாம் ஓய் " கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டாயின், எல்லாருஞ் சென்றங் கெதிர் கொள்வார் " என்று பேசத்தொடங்கி முடிப்ப தற்குள்,

சுப்புராமையர்:—நிறுத்தும் காணும் போதும்— அதிசயமாய்க் கண்டுவிட்டது போல் ஆர்பாட்டஞ் செய் கிறீர்!

சுப்புராமசந்திர ஐயர்:—ஓய் சுப்புராம ஐயரே! உமக்கென்ன? உம்மையா சுப்பையர் அழைத்தார்? அவர் தம்வீட்டில் படுங்கஷ்டத்தை எண்ணி என்னவோ பணத்தின் பெருமை இப்படிப் பட்டதென்று சொன்னார். உமக்கு இந்த ஆத்திரம் உதவாதுங்காணும்.

அப்பு ஐயர்:—அதற்கென்ன; அவர் சொன்னது உண்மைதானே. "இல்லானை, இல்லாளும் வேண்டாள்; மற்றீன் றெடுத்த தாய் வேண்டாள்"

அப்பணையர்:—இவாள் வேண்டாமல் போனால் போகட்டும். ஒன்றும் முழுகிப் போகாது. அவன் வாய்ப் பேச்சுக்கு மரியாதை யுண்டா? அதைப் பாரும் முதலில்.—

அபா-ஆனந்:—"செல்லாதவன் வாயிற்சொல்—ததாஸ்து"

இந்தக் குதுகுலப் பேச்சை மிகக் குறிப்பாய்க் கேட்டுக்கொண்டிருந்த வேங்கடாசல ஐயருக்கு விலா எலும்பு முறிந்து போகும்படியான விடா நகைப்பு வந்து விட்டது—அந்த நகைப்போடு அவர் தள்ளாடித் தள்ளாடிக் கொண்டு மேற்படி ஆசாமிகளிடம் வந்தார். அவர் வரவைக்கண்ட அவர்கள் "வரவேண்டும்! வரவேண்டும்! எல்லாம் உமது பாக்கியந்தான். நீர் இட்டசோறு எங்களைக் கட்டுக் கடங்க விடவில்லை. உமது பெருமையைத் தான் பேசிக்கொண் டிருக்கிறோம். பணத்தின்மகிமை பெரியதல்லவா?" என்றனர்.

வேங்கடாசலஐயர்:—உங்களுக்கு ஓர் இரகசியம் சொல்லுகிறேன். அதுதான் நான் தெரிந்துகொண்ட உபதேசம். நீங்களேன் வள வளவென்று சத்தமிடுகி

தீர்கள். சும்மா இருங்கள்—என்று கூறி, ஒவ்வொரு வர் காதிலும் "பணம் பந்தியிலே, குலம் குப்பை யிலே" என்று மெதுவாய்ச் சொல்லிப் பின்னும் "அது மேல் கீழ் நடு வென்னும் மூன்று லோகங்களையும் ஆட்டிவைக்கும். பணம் பாதாளம் வரையிலும் பாயும் ஈட்டி எட்டியவரையிற் பாயும், இன்றேல் பாயாமல் படுத்தாலும் படுத்துக் கோள்ளும். எப்போதுங் *"கைத் துடையான் காற்கீழொதுங்குங் கடன்ஞாலம்"

சு-ரா-சந்திர :—ஓய்! அது '†பித்துடைய அல்ல பிற'

அப்பு ஐயர்:—(ஏப்பம் விட்டுக்கொண்டே) கைப் புண்ணுக்குக் கண்ணாடியேன். நெய் நிறைந்த பாத்திரம் கெட்டியாக மூடப்பட்டிருந்தாலும் எறும்பு அதை விட்டுப்போமா?

அப்பணையர்:—அப்பு ஐயரே! வெகு சரி. உமது வாய்க்கு அரைவீசைச் சர்க்கரை தான் போடவேண் டும். பேஷ்—

'பொருளிலார்க் கின்ப மில்லை, புண்ணிய மில்லை என்றும்
மருவிய கீர்த்தி யில்லை மைந்தரிற் பெருமை யில்லை
கருதிய கரும மில்லை கதிபெற வழியு மில்லை
பெருநிலந் தனிற் சஞ்சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே".

என்று கூத்தாடினர்.

---

* கைத்து—பொருள், பணம்; கடன்ஞாலம்—கடல்சூழ்ந்த உலகம்;

† அப்படிச் செய்வது பைத்தியம் பிடித்தல்ல—முன் ஜென்மத்தில் கொடுத்துவையாதவர்கள் இப்போது அப்படி நிற்கிறார்கள்.

அ-ஆ-ஐயர்:—அதை உத்தேசித்துத்தான் “திரை கடலோடியுந் திரவியந்தேடு” என்றாள் நமது பாட்டி.

சுப்பையர் :—(அவர் கையைப்பிடித்துக்கொண்டு) எங்கள் அப்பா ஒருசமயம் இந்த விஷயமாய்ப் பேசிக் கொண்டது இப்போது ஞாபகத்தில் வருகிறது.

“பொன்னொடு மணியுண் டானாற் புலைஞனும் கிளைஞ-னென்று
தன்னையும் புகழ்ந்து நல்ல ஜாதியில் மணமுஞ் செய்வான்
மன்னரா யிருந்த பேர்கள் வகைகெட்டுப் போவா ராயின்
பின்னையு மாரோ வென்று பேசுவா ரேசு வாரே.”

என்பதுதான் அது.

சுப்பு:—நிரம்பவுஞ் சரி. அப்படித் தேடிய அதை ‘பொருள்தனைப் போற்றிவாழ்’ என்கிறபடி காப் பாற்றவேண்டும்.

வேங்கடாசல ஐயர்:—காப்பாற்றி வந்தபடியால் தான் நான் கடைத்தேறினேன். ஆதியில் நான் நித்திய தரித்திரன். அப்போது வெங்கு—வெங்கு—என்று என்னைக் கூப்பிடுவார்கள்—பிறகு பணஞ்சேர்க்கத் தொடங்கி வரவர வேங்கனானேன், வேங்கடனானேன், வேங்கடா சலனானேன், வேங்கடாசல ஐயரானேன்— அத்துடன் வீடுவாசல், மாடமாளிகை, கூட கோபுரம், நாடுநகரம்; அவர்கள், சுவாமி, தேவரீர் என்கிற பட் டங்கள், செல்வாக்கு, தூது, வந்தன வழிபாடு முத லான சகல பாக்கியங்களும் பெற்றேன். மணவாள நாராயண சதகத்தில் பதினான்காவது இடத்தையும் விலைக்கு வாங்கிவிட்டேன். அதைப்போய்ப் பாருங் கள்—என்னைப்போல முன்னுக்குவர முயற்சி செய்யுங் கள்—பிற்பாடு சொல்லுகிறேன். அவசரவேலையாகப்

போகவேண்டும். இன்னொரு சமயம் எல்லாவற்றையும் பட்டப்பகற்போல் வெட்டவெளியாக்குகிறேன். பணமே குணம்-என்பதை மட்டும் மறந்துவிடவேண்டாம். சுபம்.

1. பணம் உண்டானல் மணம் உண்டு.

2. பணக்காரன் பின்னும் பத்துப்பேர்—பைத்தியக்காரன் பின்னும் பத்துப்பேர்.

3. பணம் என்ன செய்யும்? பத்துஞ்செய்யும்.

4. பணம் பந்தியில், குலம் குப்பையில்.

5. பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்.

6. பணம் இல்லாதவன் பிணம்.

7. பணம் இருந்தால் பாகூஷா, பணம் இல்லாவிட்டால் பக்கிரி.

8. பணம் உண்டானல்படையையும்வெல்லலாம்,

புகையிலையும் கழுதையும்.

ஒருநாள் அக்பர் சக்கரவர்த்தியும் பிர்பாலும் ஒரு உப்பரிகையின்மேல் உட்கார்ந்து உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள் அவர்களுக்கு எதிரில் ஒரு புகையிலைத் தோட்டம் இருந்தது. அதில் ஒரு கழுதை சும்மா நின்றுகொண்டிருந்தது. பிர்பாலுக்குப் புகையிலை போடுவதில் அதிகப்பிரியம்—இதை யுத்தேசித்து அரசன் பிர்பாலை நோக்கி "அதோ அந்தப் புகையிலைத் தோட்டத்தில் நின்றுகொண்டிருக்கிற கழுதையைப் பார்த்தீரா? கழுதை கூடப்புகையிலையைத் தின்கிறதில்லை" என்றான்.

பிர்பால் புன்சிரிப்புடன் கழுதையைப் போலிருக்கிற மனிதர் தான் புகையிலையின் ரம்யமான வாசனையை வெறுக்கிறார்கள் என்று கூறினராம்.

---

* பிர்பால். அக்பர் சமஸ்தானத்து விதூஷகர்.

வித்தை

வெண்பா.

வித்தைமய மாமுலகில் மேவும் உயிரையெலாம்
வித்தையே விர்த்திசெய்யும் வித்தாகும்—வித்தை
வராதவுயி ரின்றென்றும் மாபலயானைக்கும்
தராதலத்திற் பாதஞ் சறுக்குமென்றுங் காண்பார்
பராவுகலை கற்றார் பலர்.

வித்தையென்பது, கல்வி, ஞானம், கைத்தொழில், தந்திரவேலை, ஜாலம் முதலிய பலபொருள் குறிக்கும் ஒரு சொல். இதை நிதானமாகச்சிந்திப்போமானால், உலகமே வித்தையின் மயமாயிருக்கிற தென்பது நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும்.

பூமியிலுள்ள சகல உயிர்களும் பிறந்தது முதல் இறந்து படுகிறவரையில் தத்தமது வயிற்றுப் பாட்டை வளர்க்கப் பல பல வித்தைகளில் படிப்படியாக விர்த்தி பெற்று வருகின்றன—உலக சம்பந்தத்தை முற்றும் விட்டொழித்த மகரிஷிகளும் அவ்வயிற்றுப் பாட்டை மட்டும் விடவில்லை. ஏன்? சுவரிருந்தன்றோ சித்திரந் தீட்டவேண்டும். ஆகையால் அவர்கள், காய், இலை, கிழங்கு, கனி, ஜலம், காற்று முதலிய சாதனங்

களால் ஜீவித்து வரும் வித்தையை அறிந்து கொண்டார்கள்—துறவு பூண்ட பட்டணத்தாரும் இவ்விஷயமாக,

"பூணும் பணிக்கல்ல, பொன்னுக்குத் தானல்ல, பூமிதனைக்
காணும் படிக்கல்ல, மங்கையர்க்கல்ல, நற்காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக்கல்ல என் சிந்தைகெட்டுச்
சாணும் வளர்க்க அடியேன் படுந்துயர் சற்றல்லவே"

என்று உலகாநுபவத்தை யொட்டி உரைத்திருக்கிறார்.

"சேவித்துஞ், சென்றிரந்துந், தெண்ணீர்க் கடல் கடந்தும்,
பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி யரிசிக்கே நாம்."

என்று வயிற்றின் கொடுமை நம்மைத் தலை யெடுக்க விடாமல், தன் பொருட்டே உழைத்துவரச் செய்வதால், அதற்காக நாம் மேற்கொள்ளும் வித்தைகள் பல என்பதை, ஔவைப்பெருமாட்டி மலை விளக்கம் போல விளக்கியருளினர்.

"ஆற்று மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே."

(ஆற்றுமாக்கள்—தரித்திரர்; மண்திணி—மண்ணால் இறுகப்பெற்ற)

என்று மணிமேகலை, நியாயமானவழியில் வயிறு வளர்க்கவல்ல வித்தையைக் கற்கும் பாக்கியம் இல்லாமல் யாசக வித்தையை மேற்கொண்டவர்க்கு அப்பிணியை ஒழிக்கும் உபகாரமாகிற வித்தையை யறிந்தவர் உயர்ந்தவரென்று கூறுகின்றது.

இந்த நியாயங்களால் சோற்று நாய்ச்சியாரின் வித்தையே இதரமான வித்தைகளுக் கெல்லாம் ஆதாரமாயுள்ள பெரிய வித்தை என்று நாம் தெரியலாமே— அந்த நாய்ச்சியார்,

மானம் நிலைப்பதும் என்னாலே—குலம்
மண்ணில் ஜொலிப்பதும் என்னாலே
தானந் தவங் கல்வி என்னாலே—பல
சட்ட திட்டங்களும் என்னாலே
மாதர்க ளின்பமும் என்னாலே—மதி
மயங்கிப் போவதும் என்னாலே
தீதுகள் செய்வதும் என்னாலே—வழி
தெரிந்து செல்வதும் என்னாலே
கண்களால் சொல்வதும் என்னாலே—இரு
காதினால் பார்ப்பதும் என்னாலே
பண்க ளிசைப்பதும் என்னாலே—பல
படித்திறங்களும் என்னாலே
வாக்குப் பிழைப்பதும் என்னாலே—அதை
வளர்க்க வல்லதும் என்னாலே
மூக்கைப் பிடிப்பதும் என்னாலே—உயர்
முத்தி பெறுவதும் என்னாலே.

என்று ஒரு மூலையிலிருந்துகொண்டு முண முண என்று ஜெபித்துக் கொண்டிருக்கிறாள்.

இந்த மகாதேவியைத் திருப்திசெய்ய, சிலர் கடன் படும் வித்தையைக் கற்க நேரிடுகின்றது—அந்தக் கடனைத் தீர்க்கும் வித்தையை மட்டும் சிலர் கற்பதில்லை; சிலர் கற்றிருக்கிறார்கள்—இது சம்பந்தமான ஒரு சிறு கதையைக் கேளுங்கள்—பிறகு மற்ற விஷயங்களைச் சொல்லுகிறேன்.

கதை

விடியா வூரில் விடாக்கண்ட ஞகிய வீராகவ னென்பவ னொருவனிருந்தான். அவன் சீட்டுப் போட் டுத் திரளான பணத்தைக் குவித்து வைத்திருந்தான். அவனிடம் அவ்வூராஞன கொடாக்கண்ட னென்னும் குப்புசாமி தினமொன்றுக்கு ரூபா ஒன்றுக்கு அதிசுலப மான வட்டியாகிய இரண்டணு விழுக்காடு ஐந்நூறு ரூபா கடன் பெற்றிருந்தான். பல கெடுவுகள் கடந் தும் கடன்தீரும் மார்க்கம் ஏற்படாதிருப்பதைக் கண்ட வீராகவன், குப்புசாமி யிடஞ் சென்று, தானே ஒரு கெடுவு வைத்து, அந்தக் கெடுவுக் குள்ளாவது தன் கடனைத் தீர்த்து விடும்படி அவனைமிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். குப்புசாமி, வீராகவனை மிக வும் புகழ்ந்து, " அப்பா! நானிடுங் கெடுவுகள் எப்ப டியோ தப்பிப்போகின்றன. அது என் இராசிபோலும்; இப்போது நீயே ஒரு கெடுவு வைத்தாயே—போகட் டும்—அதற்குள் எப்பாடு பட்டாவது உன் கடனை ஒழி த்துவிடுகிறேன். பாழுங்கடன் பட்டாலும் பட்டு விட் டேன்; அது இரவும்பகலும் என்னைச் செல்லரிப்பது போலரித்து வருகிறது. சாப்பிடும் சாப்பாடும் உட லில் ஒட்டுகிறதில்லை. "கடன் பட்டாயோ கலங்கி நின்ருயோ" என்கிருர்களே அது சரியான பேச்சே; அதை நினைத்தாலும் அடிவயிறு தீயிலிட்ட பஞ்சு போல் பற்றியெறிகிறது. யார் செய்த புண்ணியமோ நீயே மனமிரங்கி ஒரு கெடுவு வைத்தாயே. அது தான் பெரிது. நல்லது நீபோ—கெடுப்பிரகாரம் வா!! என்று சொல்லி அவனை அனுப்பி விட்டான்.

கெடுவிட்ட நாள் நெருங்கியதும் வீரராகவன், குப்புசாமியிடம் வந்தான். அவன் வருவதைத் தூரத்தி லிருந்தே பார்த்துவிட்ட குப்புசாமி பரபரப்பாகத் தன் வீட்டுக்குள் சென்று நாலாபக்கமுந் தேடிக் கொண்டிருந்தான். அவனுடைய மனைவி "என்ன தேடுகிறீர்கள்?" என்று கேட்டாள். குப்புசாமி "ஒன்று மில்லை; புளியங் கொட்டை ஒன்று அகப்படுமாவென்று பார்க்கிறேன். பாழும் வீட்டில் அது கிடைக்கப் போகி றதா ?" என்றான். "புளியங்கொட்டையா! எதற் காக?" என்று அவன் பெண்டாட்டி அதியாவலோடு விசாரித்தாள். குப்புசாமி.

"எல்லாம் உன் இழவுக்குத்தான்; பட்ட கடன் சும்மாவிடுமோ? கடன்கொடுத்த உன்பாட்டன் அதோ வருகிறான்; அவனுக் கென்ன பதில் சொல்லுகிறது; இட்ட கெடுவெல்லாம் போய், அவனே அன்புகூர்ந்து வைத்த கெடுவும் கிருஷ்ண பக்ஷத்துச் சந்திரன் போல் விளங்கி விட்டது; இப்போது ஏதாவது ஒரு தந்திர வித்தையால் சாம்பலடித்து அனுப்பிவிட்டால் பிறகு பட்டை நாமத்தைப் பரக்கச் சாத்திவிடலாம். அதற் குத்தான் வழிதேடுகிறேன்" என்றான். இப்பேச்சைக் கேட்ட அவன் மனைவி, "அது என்ன வித்தையோ எனக்குத் தெரியாது; உங்கள் சூதை நான் அறிய மாட்டேனா! நானும் தங்களுக்கு வாழ்க்கைப்பட்டு விளை யாட்டாகவே வெகு வருஷங்கள் கழித்து விட்டேன். எவ்வளவோ நல்லது பொல்லது நம் வீட்டில் நடந் திருக்கும். ஒரு காலத்திலாவது எங்கள் தாயார் வீட் டிற்கு இங்கிருந்து ஏதாவதொரு துரும்பு அனுப்பிய

துண்டா? இருக்கட்டும்; நீங்களே வாழுங்கள். இதோ ஒரு கொட்டை யிருக்கிறது; இதில் வரும் முதற் பலனையாவது எங்கள் தாயார் வீட்டுக்குக் கொடுக்கப் பாருங்கள். நான் இலேசில் விடமாட்டேன். பிறகு உங்கள் கடனைப் பார்த்துக் கொள்ளுங்கள். அந்தக் கவலை எனக்கு வேண்டாம்" என்று முறுக்குந் திருக்குமாய் முகத்தை முன்னும் பின்னுந் திருப்பிக்கொண்டு, மூக்கைப்பிடித்த வண்ணம் மூச்சுவிடாமல் சொல்லி ஒரு குறை யழுதுதீர்த்தாள்.

குப்புசாமி "போதும், போதும், உன் புலம்பலை நிறுத்து; அடீ என்ன ஆளைக்காணோம், பிள்ளை எத்தனை? சம்பந்தம் எங்கே? என்று கேட்பது போல் கேட்க வந்தாய்; எல்லாம் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்" என்று பெண்சாதியைச் சமாதானப் படுத்தினான். இச் சந்தர்ப்பத்தில் வீரராகவன் வந்துவிட்டான்.

அவனைக் கண்டதும் குப்புசாமி "வரவேண்டும், வரவேண்டும்; அப்பா உனக்கு ஆயுசு நூறு; உன்னைத்தான் நினைத்துக்கொண் டிருக்கிறேன். நல்லவேளை— நீயும் வந்துவிட்டாய்; சுகமா?" என்று கேட்டான்.

"உன் புண்ணியத்தால் சுகந்தான்; என்னை நினைக்கிறவருமுண்டோ? கையிலுள்ள பொருளை வட்டிக் காசைப்பட்டுக் கேட்பவர்க் கெல்லாம் கடன் கொடுத்து விட்டு ஓட்டாண்டியாய்ச் சிதம்பர ரகசியத்தை (ஆகாயத்தை)ப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். வட்டிகொடாமற் போனாலும் அசல்வந்தால் போது மென்றிருக்கிறேன். வாங்கிக் கொண்டவர்கள் தங்கள் வயிற்றைக் காட்டுகிறார்களே யொழிய என்வயிற்றைக் கவனிக்கவில்லை. எருது வருத்தம் காகத்துக் கேப்படி தெரியும்? எல்லோருமா கல் மனசுள்ளவரா யிருப்பார்கள்? தயாளம் உள்ளவர் ஒருவராவது இருக்க மாட்டார்களா என்று உன்னைத் தெய்வம்போல் எண்ணி ஓடி வந்தேன். இந்தவேளையில் உதவினால் இனம் கொடுத்த

தாகப் பாவித்துச் சந்தோஷப் படுவேன்'' என்று வீராகவன் வியாகூலத்தோடு சொன்னான்.

குப்புசாமி அவனைப்பார்த்து "வீராகவா! விசனப்படாதே. இந்தக்காலம் அப்படி யிருக்கிறது. கஷ்டமே எங்குந் தலையெடுத்து விட்டது. உபகாரத்துக்கு அபகாரந்தான் பிரதிபலன். ஆனாலும் என்வரையில் அந்த எண்ணங் கிடையாது. கைநீட்டி வாங்கியதை இந்த ஜென்மத்தில் கொடுக்கா விட்டாலும் இன்னொரு ஜென்மத்தில் பிள்ளையாகப் பிறந்தாவது பாடு பட்டு ஒற்றைக் கிரட்டையாய்த் தீர்க்கத்தானே வேண்டும். அந்தப் பாவத்துக்கு நானல்ல ஆள். உன் கடனுக்கு வழிதேடிவிட்டேன். பீடை ஒழிந்தது. மனமும் சாந்தமடைந்தது'' என்றான்.

வீராகவன் இந்த அமிர்த மொழியைக் கேட்டதும் ஆனந்த சாகரத்தில் முழுகிவிட்டான். "குப்புசாமி! 'நல்லா சொருவருளரேல் அவர்பொருட்டு, எல்லார்க்கும் பெய்யு மழை' என்பது சத்தியவாக்கென்று இப்போது என் புத்தியிற்பட்டது. உத்தமரில்லாமலா சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் அஸ்தமிக்கிறான். கடவுள் உனக்கு நீண்ட ஆயுளையும், வேண்டிய பிள்ளைகளையும், நிறைந்த செல்வத்தையும், பரந்த செல்வாக்கையும் பூருவபட்சத்துப் பொன்மதிபோல் பெருக வைப்பார். நல்ல வாக்கால் என் வயிற்றில் பாலைவார்த்தாயே. அதுவே எனக்கு நீ எவ்வளவோ உபகாரஞ் செய்தது போலிருக்கிறது. என்ன வழிதேடினாய்? மொத்தமாகப் பைசல் செய்யப் போகிறாயா?'' என்றான்.

குப்புசாமி உடனே தன் மனைவியைச் செம்பில் ஜலங்கொண்டுவரச் செய்து வீராகவனை அழைத்துக் கொண்டு புழைக்கடைக்குப்போய் "அப்பா! இந்த இடத்தில் நிலத்தைக் கொத்தி ஜலத்தைவார்த்து இக் தக் கொட்டையை உன் கையினாலேயே நடு—'' என்றான். வீராகவன் "நமக்கென்ன—'' அவன் இஷ்டம் போல் நடந்து அவனை மகிழ்வித்து, நமது காரியந்தனை

முடித்துக்கொள்வோ'' மென்று நினைத்து அவ்வாறே செய்தான். பிறகு குப்புசாமி அவனை நோக்கி "ஏனப்பா! உன் மனம் இப்போது குளிர்ந்து விட்டதா?" என்று கேட்டான். "என்ன விசேஷம்?" என்று வீரராகவன் வினவினன். "விசேஷமா? ஓ! கோ! கடனுக்கு வழி பிறந்துவிட்டதே, விசேஷமென்ன வென்று கேளாதிருக்கமுடியுமா? ஆகிலும், முதல் பலனுக்குமட்டும் நீ ஆசைப்படுவதுகூடாது. அதற்கு என் பெண்டாட்டி ஆசைப்பட்டு விட்டாள். அவள் தன்,தாய் வீட்டைச் சந்தோஷப்படுத்த வேண்டுமாம். அடுத்த பலன் உன்னுடையதுதான். அதற்குத் தடையே கிடையாது'' என்றான் குப்புசாமி.

இதைக்கேட்டதும் வீரராகவன் தன்னையு மறந்து விலாப்புடைக்கச் சிரிக்கலானன். குப்புசாமி அவனைக் "கொஞ்சம் நிதானி அப்பா! இதுவரையில் நீ என்னிடம் வந்து போகும்போதெல்லாம் வாடின முகத்துடன் முணுமுணுத்துக்கொண்டு போவாயே. இப்போது உன்னையும் மீறிவருஞ் சிரிப்பை நீ எங்கே மறைத்துவைத்துக் கொண்டிருந்தாய்'' என்று சொல்லி இருவருந் தத்தமது வீடுபோய்ச் சேர்ந்தனர்.

இது உலக தந்திரம். வித்தையை உள்ளபடி அறிபவர் இந்த நடையையுந் தெரிந்து அதற்கிணங்கியவர்போல் நடித்து இத்தகைய தந்திர ஆசாமிகளையும் நல்வழிக்காளாக வைத்தல்வேண்டும். அதுதான் கற்றதின் பயன். "*உலகத்தோடொட்ட வொழுகல் பலகற்றுங் கல்லா ரறிவிலாதார்'' என்று நாயனுர் கூறியருளினர்.

இனி வித்தையை வரன் முறையில் கற்றவரின் பழக்க வொழுக்கங்களைச் சிறிது சொல்லுகிறேன். கேளுங்கள்— (வரும்)

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

---

* உலகம்—மக்கள்; ஒட்ட—பொருந்த; ஒழுகல்—நடத்தல்; பல—அநேகநூல்களை.

மார்க்கண்டேயர்.

(30-வது பக்கம் தொடர்ச்சி.)

மிருககண்டூயர் தம்முடைய மனைவி விருத்தை யோடு மனமொத்து வாழ்ந்துவந்தார். விருத்தை இல் விற்கினியைந்த பெருமாட்டியாய் விளங்கினாள். இப்படித் தம்முடைய மகனும் மருமகளும் மனமொத்து வாழ்வ தைக் கண்டு மகிழ்ச்சியடைந்த குச்சகமுனிவர், தவஞ் செய்வதற்கெண்ணி உத்தரதேசத்துக்குச் சென்றார். பிறகு மிருககண்டூயர்க்கு ஒரு புதல்வன் பிறந்தான். அந்தப் பிள்ளைக்கு அவர் மிருகண்டு என்று பெயரிட் டார். தமது தந்தை தமக்குச் செய்வித்ததுபோல் தாமும் தம்பிள்ளைக்குச் செய்யவேண்டியவைகளையெல்லாஞ் செய் வித்துத் தவத்திற்குச் சென்றார்.

மிருகண்டு முனிவர்க்கு முற்கல முனிவருடைய புதல்வியாகிய மருத்துவதி என்னும் உத்தமி மனைவியா னாள். இவர்கட்கு வெகுகாலம் வரையில் மக்கட்பே றில்லாமலிருந்தது. அதனால் வருத்தமுற்ற அவர்கள் தாங்கள் வசித்துவந்த அநாமய மென்னும் வனத்தை விட்டுப் புறப்பட்டுக் காசிக்ஷேத்திரம்போய்ச் சேர்ந்தார் கள். காசியில் நாடோறும் கங்காநதியில் ஸ்நானம் செய்து மணிகர்ணிகை என்னும் திருக்கோயிலுக்குப்போய், சிவ பெருமானை வழிபட்டுவந்தார்கள். இவ்வாறு சிலகாலஞ் சென்றபிறகு மிருகண்டு முனிவர் தவஞ்செய்ய எண்ணி அந்தக் கோயிலுக்கு அருகே தவச்சாலை ஏற்படுத்திக்

கொண்டு ஒருவருஷகாலம் கடுமையான தவஞ்செய்து வந்தார்.

அவர்செய்த தவத்தில் மகிழ்ச்சியடைந்த சிவ பெருமான் ஒருநாள் காட்சிதந்து "நீ விரும்புவது யாது?" என்றுகேட்டார். மிருகண்டு சிவபெருமானைப் பணிந்து துதித்துக் கைகூப்பி நின்று "எம்பெருமானே! அடியேன் புத்திரபாக்கியத்தை விரும்பித் தவஞ்செய்தேன்! தந்தருளல்வேண்டும்" என்றார். சிவபெருமான், உடனே சிறுநகைசெய்து, "அப்பனே! ஒரு புதல்வனைத் தருகின்றேன். அவன் நூறு வயதுவரையில் ஜீவித்திருப்பான். ஆனால் அவனுக்குத்தீயகுணங்கள் மிகுந்திருக்கும். மூடனாகவிளங்குவான். ஊமையும், செவிடும் முடமும் குருடுமாய்த் தன் ஆயுள் காலமெல்லாம் நோயால் வருந்துவான். இவன் வேண்டுமா?—இல்லை யானால், ஒரு புதல்வன், அவன் அழகில் மிக்கவனா யிருப்பான்; அவயவக் குறையில்லாதவனும் பிணியற்றவனுயு மிருப்பான்; சகலகலைகளிலும் வல்லவனாய் அறிவிலே பெரியவனாயிருப்பான்; நம்மிடத்தில் அவனுக்கு அன்பு அதிகமிருக்கும். ஆனால் உலகத்தில் பதினாறு வயதே ஜீவித்திருப்பான். இவன் வேண்டுமா? உன் எண்ணம் எது? சொல்" என்று வினவியருளினர்.

இதைக் கேட்டதும் மிருகண்டுமுனிவர், சற்று ஆலோசித்தபடி யிருந்து, பிறகு, பணிவோடு ஜகதீசனை நோக்கி, "என் ஆண்டவனே! வயதில் குறைந்தவனானும் அறிவிலே பெரியவனும் உன்னிடத்தில் மாறாத அன்புடையவனும் உடற்குற்றமும் ஒரு சிறிதுமில்லாதவனும் உள்ள ஒரு மைந்தனையே தந்தருளல் வேண்

டும்" என்று வேண்டிக் கொண்டார். உடனே சிவ பெருமான், "நீ விரும்பியபடியே உனக்குச் சற்புத்திர னைத் தந்தோம்" என்றுகூறி மறைந்தருளினர். மிருகண்டு முனிவர் துதித்துக்கொண்டே தவச் சூழல் நீங்கித் தம தாசிரமம் வந்து மனைவியாளிடம் தாம் கண்ட இறைவன் காட்சியையும் அவரருளிய வரத்தையுங் கூறிப் பெரு மகிழ்ச்சியோ டிருந்தார்.

இப்படியிருக்கையில், பூவுலகத்திலுள்ளவர்கள் துன் பத்தினின்று நீங்கவும் சிவபுண்ணியம் பெருகவும் தவ முனிவர்கள் உய்யவும் சைவசமயம் வாழவும் இயமன் இற க்கவும் சிவபெருமானுடைய திருவருளினல் மருத்துவதி கர்ப்பம் அடைந்தாள். பிறகு பத்துமாதங் கடந்ததும், பங்குனி மாதத்திலே ரேவதி நட்சத்திரத்திலே மிதுன லக்கினத்திலே சுக்கிரனுங்குருவும் உச்சஸ்தானத்தி லிரு ப்ப சூரியன் முதலிய ஏனைய கிரகங்கள் நட்பும் ஆட்சியு மாகிய ஸ்தானங்களிலிருப்ப ஒரு சற்புத்திரா திருவவதா ரஞ் செய்தார். அப்பொழுது பெரியோர்கள் யாவரும் மகிழ்ந்து ஆசீர்வதித்தார்கள். மலர்தூவி மகிழ்ந்தார்கள். தேவதுந்துபிகள் ஒலித்தன. அந்தக் காசிப்பதியே யன்றி உலகமுழுவதும் மகிழ்ந்தன. மிருகண்டு முனிவர் உடனே பெருமகிழ்ச்சியோடு கங்கையிலே நீராடி, பிரா மணர் முதலியவர்கட் கெல்லாம் தானங்கொடுத்து சாத கர்மம் முதலியவற்றைச் செய்தார். அங்கு அச்சமயம் பிர்மதேவர் தோன்றி அந்தப்புத்திரனுக்கு **மார்க்கண் டேயர்** என்று நாமகரணஞ் செய்தார்.

மார்க்கண்டேயர், இளம்பிறைபோல் வளர்ந்துவந் தார். மிருகண்டு முனிவர் குழந்தைக்கு அவ்வப்போது செய்விக்க வேண்டியவைகளை யெல்லாஞ் செய்வித்து முதல் வருஷத்திலே சௌளகருமமும் இரண்டாம் வரு ஷத்திலே கன்னவேதனமும் செய்வித்தார்; பிறகு ஐங்

தாம் வருஷத்திலே உபநயனஞ் செய்வித்துக் கலைபயிற்று வித்தார். மார்க்கண்டேயர் நாளடைவில் வேத முதலிய சகலகலைகளிலும் தேர்ச்சிபெற்று மெய்ப்பொருளுணர்ந்து சிவபெருமானே தெய்வமென்று நம்பி திடபக்திகொண்டு இறைவனுடைய திருவடியையே சரணமாக அடைந்தார்.

இவ்வாறிருக்கையில் பதினாறுவயது நிரம்பும் தருண மாயது. அப்பொழுது மிருகண்டு முனிவரும் அவர் மனைவியும் பெருந்துயரப் பட்டுக்கொண் டிருந்தார்கள். இதைக்கண்ட மார்க்கண்டேயர், "இவ்வாறு நீங்கள் துயரப் படக்காரணமென்ன?" என்று கேட்டார். மிருகண்டு முனிவர், " அப்பா! முன்னாளில் சிவபெருமான், உனக்குப் பதினாறுவயது என்று அருளிச்செய்தார். அது முடியப் போகிறது; அதனால் வருந்துகின்றோம். இதற்கு நீ எப்படித் தப்பப்போகின்றாய்! என் கண்ணே! மரணத்தைக் கடப்பவர் யாவர்?" என்று கூறிக் கண்கலங்கினார். மார்க்கண்டேயர், சற்று ஆலோசித்தபடி நின்று, பிறகு தாய் தந்தையரைப் பணிந்து, எழுந்து இருகைகூப்பிநின்று, "நீங்கள் விசனப் படாதீர்கள்! நான் இன்றே அந்த நமனுடைய வலியைக் கடக்க முயல்கின்றேன். உயிர்க்குயிராய் எங்கும் நிறைந்திலகும் சிவபெருமானைப் பூசைசெய்து, யமனை வெல்கின்றேன். யமனை வெல்ல இதனினும் வேறு வழி யிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அநுமதி கொடுத் தருளுங்கள்" என்றார். மிருகண்டு முனிவரும் மருத்துவதியும் தங்கள் பிள்ளையினுடைய சிவபக்தியைக் கண்டு மனத்திடங்கொண்டு, "சிவபெருமானுடைய திருவருட்செல்வம் பெற்றவர்க்கு எது பெறுவது அரிது! இப்படிப்பட்ட செல்வத்தைப் பெறுவதற்கு நீ திடசித்தங் கொண்டிருக்கிறாய்; அதனால் நாங்கள் துயரம் நீங்கியவர்களானோம். மக்களாய்ப் பிறந்தவர்களின் கடமையும் அதுதான். ஆதலின் நீ கூறியபடி அடியார்க்கிரங்கி ஆதரித்தருளும் அமலமூர்த்தியாகிய சிவபெருமானையே சரணமடைந்து அவன் பூசைசெய்துவா? இதனை யன்றி வேறு வழி என்ன இருக்கிறது. நாங்களும் அவனையே நம்பி

அல்லும் பகலும் அவனையே தியானித்து வருவோம்" என்று கூறிப் பிள்ளையை மார்போடணைத்துத் தழுவி உச்சிமோந்து, அன்போடு ஆசீர் வதித்தார்கள்.

இவ்வாறு தாய் தந்தையர்பால் விடைகொண்ட மார்க் கண்டேயர், சிவபெருமானுடைய திருவருளையும் அவரி டம் தமக்குள்ள அன்பையுமே துணையாகக்கொண்டு மணி கர்ணிகைக் கோவிலுக்குச் சென்றார். அங்கே சிவபெரு மானுடைய ஸந்நிதியில் நின்று துதிபுரிந்து வணங்கிக் கோவிலை வலம்வந்து மீண்டும் என்பு நெக்குருகத் துதித்துப் பணிந்து, "என் ஐயனே! உன்னையே நம்பி னேன்! நம்பிய என்னைக் காத்தருளல் வேண்டும்" என்று கூறி வெளியே வந்து தனிமையான ஓரிடத்திற்குச் சென்று அங்கோர் இலிங்கம் ஸ்தாபித்து அதனை அன் போடு பூசித்துத் துதித்துத் தவம்புரிவாராயினர்.

இப்படிப் பலநாள் செய்துவருகையில், இவருடைய தவத்திற்கு மகிழ்ந்த சிவபெருமான், விருஷபவாகன ரூடராய் எதிர்தோன்றி, "அன்ப! உன் பூஜைக்கும் நீ செய்யும் தவத்திற்கும், நான் சந்தோஷமடைந்தேன். நீ விரும்புவது யாது?" என்று கேட்டார். மார்க்கண்டே யர், "கருணாநிதியே! அடியேன் சொல்லவும் வேண் டுமா? நீ யறியாததா? உன்னையே சரணமாக வடைந்த என்னை இயமன் கைப்படாமல் காத்தருளவேண்டும். இதுதான் அடியேன் விரும்புவது" என்று கூறிப் பணிந் தார். கருணையங்கடலாகிய சிவபெருமான், "நீ யமனுக்கு அஞ்சவேண்டுவதில்லை! அவன் என்பெயர் கூறுபவரி டம் வரமாட்டான். வந்தால் தப்பமாட்டான். நீ அவ னுக்கு ஒரு சிறிதும் அஞ்சவேண்டாம்" என்று கூறித் தமது அரிய திருவடிமலர் இரண்டையும் மார்க்கண்டேய ருடைய சிரசில் பொருத்தியருளி அந்தர்த்தானமானார்.

திருவடிமலர் சிரசிலே சூடப்பெற்றதும் மார்க்கண் டேயர், "இனி உய்ந்தேன்! இனி உய்ந்தேன்!!" என்று கூறி என்றுமடையாத ஆநந்தமடைந்து சிவ பெருமானை

மனமார்ந்த அன்போடு துதித்து வணங்கி தியானித்த படியே சிந்தையற்றிருந்தார்.

இப்படியிருக்கையில் மார்க்கண்டேய முனிவர்க்குப் பதினாறுவயதெல்லை கடந்தது. அந்த நாளில் ஒரு யம தூதன் அவர் பூசிக்கும் ஸந்நிதியில் வந்து பார்த்தான். "ஓ இவனுடைய பூஜை பெரிதாயிருக்கிறது. இவன் சிவபெருமானை அடைக்கலம் புகுந்திருக்கிறான். இவ னிடம் நாம் செல்வதும் முடியாததாகும்" என்று கருதி வந்தவழியே திரும்பி இயமதர்ம ராஜனிடம் போய் வணங்கிநின்று "இறைவனே! மார்க்கண்டேயன் சிவபெருமானிடம் திடமான அன்புகொண்டு பூஜைசெய் கின்றான். அவனிடம் செல்ல எனக்குத் தைரியமுண் டாகவில்லை. என்ன செய்வேன், வந்தவழியே திரும்பி விட்டேன்" என்றான்.

இதைக் கேட்டதும் இயமன் பெருஞ் சினங்கொ ண்டு பெருமூச்செறிந்து, "என்ன ஆச்சரியமிது! இது வரையில் நேராத புதுமையாயிருக்கிறது. யாவன் அச்சிறு வன்! நாசமற்ற முழுமுதற்கடவுளோ அவன்? நல்லதிது" என்று கூறித் தம்பணியாளரில் ஒருவனை நோக்கி, "நீ போய் கணக்கர்களை இங்கே அழைத்துவா" என்று கட் டளையிட்டான். அவன் அக்கணமே ஓடிக் கணக்கர்களை அழைத்துவந்தான். இயமன் அவர்களைப்பார்த்து "பூலோ கத்தில் யாரோ சிவபூஜை செய்கின்றானாம், அவன் பெயர் மார்க்கண்டனாம்; அவனுக்கு வயசெல்லை பார்த்துச் சொல் லுங்கள் இந்தநிமிஷமே" என்றான். கணக்கர்கள் உடனே கணக்கையெடுத்துப் பரிசோதித்துப் பார்த்து, "வேந்தே, சிவபெருமான் அச்சிறுவனுக்கு முன்னாளில் பதினாறு வயது என்று எல்லை கூறினார். அது முடிந்து விட்டது; அச்சிறுவன் செய்யும் சிவபூஜை தருமத்தின் பாலது; அரிய தவத்தைச் செய்துள்ள முனிவர்களாயினும் அறி ஞர்களாயினும் வலியவர்களாயினும் வேறு எவர்களாயி னும் விதியை வெல்லவல்லவர்யாவர்? இவன் சொர்க்கத்திற் குரியவன், நரகதுன்பத்திற்குத் தப்பியவன்" என்றார்கள்.

இயமன் “ அப்படியா, சரி—தெரிந்துகொண்டேன். இவனைப்பிடிக்க இன்னுமேன் தாமதிக்கவேண்டும்” என்று கூறித் தன்னுடைய மந்திரியாகிய காலனென்பவனை வரவழைத்து, “ நீ போய் அந்த மார்க்கண்டேயனை இங்கே என்முன் கொண்டுவா இக்கணமே” என்று கட்டளையிட்டனுப்பினான். காலன், “ உத்தரவின்படியே நடக்கின்றேன்” என்றுகூறிப் பூலோகம் வந்து மார்க்கண்டேயரிடஞ் சென்று அவர் செய்யும் சிவபூஜையைக் கண்டு பிரமித்து நின்று “ ஓ இவனை எப்படிப்பிடிப்பது” என்று எண்ணி ஏங்கிநின்று, அவர் கண்காணத் தோன்றி அவரை வணங்கினான். வணங்கலும் மார்க்கண்டேயர் “ நீயார் ” என்று கேட்டார். காலன், “ நான் இயமனுடைய மந்திரி! உமக்கு ஆயுள் முடிந்துவிட்டது. உம்மை நமனுலகுக்குக் கொண்டுபோக வந்தேன். நீர் வருதல் வேண்டும், இது தடுக்கும் தன்மையதல்ல. மரணம் என்பது பிரமதேவர்க்குமுண்டு. இது புதிதாய்த் தோன்றியதல்ல. படைத்தல் காத்தல்போல, இயமன் அழித்தலும் சிவபெருமானுடைய கட்டளைப்படி நடப்பதாம். ஆதலால் நீர் வருவீர்; நீர் சிவபூஜை புரிவதைக்கேட்ட எமதுவேந்தர், உம்மைக்காண விரும்புகிறார்; நீர் வந்தால் உம்மை மரியாதையாய் நடத்துவார். உமக்கு வந்தன வழிபாடும் செய்வார். நீர்செய்த சிவபூஜையினால் அவர் உமக்கு இந்திர பதத்தைத்தருவார்” என்றுகூறி அழைத்தான். மார்க்கண்டேயர், “ நான் எமலோகத்திற்கு வரமாட்டேன். நான் இந்த என் சிவபெருமானை விட்டு அசையமாட்டேன்! நீ என்னை என்னவேண்டுமானாலும் செய்துகொள்” என்றார். காலன் “ஓ திடமான பக்தியுடையவனாயிருக்கின்றான்; இவனை நாம் பிடிப்பது முடியாதகாரியம்” என்றெண்ணி, “ மார்க்கண்டேயரே வரமாட்டீரா, நான்போகட்டுமா” என்று கேட்டான். மார்க்கண்டேயர், “ நீபோய்விடு, நிற்பதிலே பயனில்லை” என்றார். காலன் வேறொன்றும் பேசாமல் உடனே இயமனிடம் சென்று செய்தி சொன்னான்.

இயமன் செய்திகேட்டதும் தாங்கமுடியாத கோபமடைந்து உடனே தன்னுடைய எருமைக்கடா வாகனத்தில் ஏறிக்கொண்டு மார்க்கண்டேயரிடம் வந்து, " மார்க்கண்டேயா ! நீ என்ன எண்ணினாய் ! யாதுசெய்தாய் ? முன்னை ஊழின் முறைமையையும் சிவபெருமானுடைய திருவாக்கையும் கடக்கலாமா ? நீ ஊழின் வன்மையைச் சிறிதும் ஆராயாமல் பேசிவிட்டாய். இறப்பும் பிறப்பும் எல்லோருக்குமுண்டு; பெருந் தவத்தையுடையவர்க்கும் கடக்க இயலாத இறப்பைக் கடக்க இயலும் என்று நீ துணிந்தது எவ்வாறு? நீ நாடோறும் செய்யும் சிவபூஜை உன் பாவத்தைப் போக்குமேயன்றி நான் வீசும் பாசத்தையும் விலக்கவல்லதா ?" என்று கேட்டான்.

மார்க்கண்டேயர் இயமன் இவ்வாறு கேட்டதும் சிவபெருமானை மனத்திலே தியானித்து இயமனை நோக்கி, "நீ சொன்னதுண்மையாயினும், முடிவென்பது எம்பெருமானுடைய அடியார்க்கில்லை, உண்டாயினும் உன் உலகத்திற்கு அவர்கள் வரமாட்டார்கள். திருக்கயிலாச மலைக்கே போவார்கள் ; அவர்கள் உன்னை மதியார்கள் " என்றார்.

மார்க்கண்டேயர் இவ்வாறுகூறக் கேட்டதும் இயமன், கண்களில் நெருப்புப் பொறிபறக்க விழித்து, " நீ என்னைப் பயப்படுத்துகிறாய் போலிருக்கிறது. இயமன் வலியற்றவன் என்று எண்ணிவிட்டாயோ ! அடே இதோ பார் " என்று கூறி மார்க்கண்டேயர் முன் நீலமலை போல்நின்று ஆர்த்தான். மார்க்கண்டேயர் அவனைத் திரும்பிப் பாராமல் சிவபெருமானைத் துதித்துக்கொண்டு அவர் வசமாய் நின்றார். இயமன், உடனே அவர்மீது பாசத்தை வீசினான். பாசம் பாலகனாகிய மார்க்கண்டேயருடைய கழுத்தில் விழுந்தவளவில்,"ஓ நமது பக்தன் மீது பாசம் வீசிவிட்டான். இனி நாம் தாமதிக்கலாகாது ! என்று கோபங்கொண்டு இலிங்கத்திலிருந்து திடீரென்று தோன்றி இயமனைத் தமது இடது திருவடியினால் சிறிது உதைத்தார். உதைத்தவுடன் இயமன் பூமியிலே விழுந்தான். மார்க்கண்டேயர், ' எம் முயிரைக்காக்

கச் சிவபெருமானுண்டு. இயமன் வந்துயாதுசெய்வான்' என்று துதிபுரிந்தவாறே யிருந்தார். சிவபெருமான் அவரிடம் மகிழ்ச்சிகொண்டு " நீ நம்மை மெய்யன்போடு பூஜைசெய்த மையினுல் நாம் உனக்கு முடிவில்லாத ஆயுளைத் தந்தோம் " என்று திருவாய்மலர்ந்து சிவலிங்கத்தினிடம் மறைந்தருளினுர். பிறகு மார்க்கண்டேயர் சிவபெருமானுடைய திருவுருவத்தை அன்போடு தியானித்துக்கொண்டு மணிகர்ணிகை யென்னும் திருக்கோவிலுக்குள்ளே சென்று வலம் வந்து பணிந்து தமது தாய் தந்தையரிடம் சென்று அவர்களைப் பணிந்து நடந்ததைச் சொல்லி மகிழ்வித்தார். மார்க்கண்டேயர் என்றும் கேட்டிராத இந்த அதிசயத்தையும் சிவபெருமானுடைய திருவருள் பிரபாவத்தையும் எண்ணி எண்ணி எப்போதும் அந்த முழுமுதற் கடவுளினிடமே அன்பு பூண்டவராயிருந்து ஜீவன்முத்தராஞர்.

மார்க்கண்டேயருக்கு இடர்செய்த இயமன் இவ்வாறுகவே, பூமியின்கணுள்ள உயிர்களெல்லாம் இறவாமல் நெடுங்காலம் வளர்ந்து பெருகின. இதனுல், பிரமா முதலிய தேவர்கள், சிவபெருமானிடம் வந்து அவரை வணங்கித் துதித்து, " இயமனை மறுபடியும் பிழைப்பிக்க வேண்டும் " என்று பிரார்த்தித்தனர். சிவபெருமான் அவர்களுடைய பிரார்த்தனைக்கிரங்கி உடனே இயமனை எழுப்பித் தந்தார். இயமன் எழுந்ததும் சிவபெருமானை வணங்கித் துதித்து "என் பிழை பொறுத்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தான். சிவபெருமான், " இனி நீ என்னைத்தியானிக்கும் அன்பர்களிடம் செல்லாதே! எனதடியார்களைக் கேவலமானமனிதரென்று எண்ணுதே! நாமென்றே எண்ணி வணங்கு " என்று மதிபுகட்டி " நீ உன் உலகம் செல் " என்று திருவாய் மலர்ந்தருளினுர். பிரமன் முதலிய சகல தேவர்களும் சிவபெருமானை வணங்கி விடைகொண்டு சென்றனர். பிறகு " சிவபெருமானுடைய பூஜையும் அன்பும் பெருமையுடையது!" என்று உலகம் புகழ்ந்துபேசி அவ்வாறே நடக்கமுயன்றது.

ஹாஸ்யம்.

ஒரு நவீன நாகரீகன் ஒரு நாற்காலியிலுட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவன் எதிரில் ஒரு கண்ணாடி மேஜையின்மேல் வைத்திருக்கிறது. அதில் அவன் தன் முகத்தைப் பார்த்துகொண்டே கையில் க்ஷவரக் கத்தி பிடித்துத் தானே முகக்ஷவரம் (Self shaving) செய்துகொண்டிருக்கிறான். முகத்தில் ஒரு பக்கம் க்ஷவரம் முடியும் தருணம். மற்றொருபக்கமும் பிரஷினால் (Brush) தடவிய சோப்நுரை (Soap lather) நிறைந்திருக்கிறது.

இச்சமயத்தில் ஆறுவயதுள்ள அவனுடைய குமாரன் அவன் பக்கத்தில் நின்றுகொண்டு கண்ணாடியைப் பார்த்தான். பார்த்தவன் "அப்பா, அப்பா, உன் மூஞ்சி அழகாயிருக்கப்பா, வெள்ளைவெளேருன்னு! எனக்குக் கூட க்ஷவரம் பண்ணிவிடப்பா, அப்பா, எனக்குக்கூட க்ஷவரம் பண்ணிவிடப்பா" என்றான்.

தகப்பன் பையனைக் கவனிக்காமல் தன் வேலையிலேயே ஊக்கமாயிருந்தான். பையன் மறுபடியும், "அப்பா, பண்ணிவிடப்பா" என்றான்.

தகப்பன்:—நாளைக்கு அம்பட்டன் வருவான். பண்ணிவிடச் சொல்லுகிறேன்

பையன்:—போப்பா, அம்பட்டனென்னத்துச்கு? நீதான் பண்ணிவிடேன்

தகப்பன்:—(சிரித்துக்கொண்டே) "போடா தொந்தரவுசெய்துகொண்டு நிற்கிறாய், எல்லாம் நாளைக்காகட்டுமடா"

பையன்:—அப்பா, நாளைக்கென்னத்துக்கு இன்னிக்குத்தான் பண்ணிவிடப்பா, அப்பா சோப்தேச்சி பண்ணிவிடப்பா?

தகப்பன்:—நான் உனக்குப் பண்ணமுடியாது, அம்பட்டன் வரட்டும்—

பையன்:—என்னப்பா, நீமாத்திரம் பண்ணிக்கிருயே? எனக்குப் பண்ணப்படாதாக்கும்? அப்பா—

தகப்பன்:—இதென்னடா தொந்தரவு. அம்பட்டந்தாண்டா உனக்குப் பண்ணிவிடவேண்டும்—வரட்டும்.

பையன்:—அம்பட்டனென்னத்துக் கப்பா! நீதான் நன்ருப் பண்ணரயே—நீயே பண்ணிவிடப்பா, அம்பட்டனுக்குக் கொடுக்கிற காசை உனக்குக் கொடுக்கிறேன் அப்பா, பண்ணிவிடப்பா, இதோ அம்மாகிட்டேபோய் காசு வாங்கிக்கிண்டுவரேன்—என்று சொல்லிவிட்டு ஓடுகிருன்.

தகப்பன்:—(தனக்குள்) இதென்னடா, அனர்த்தமாக முடிந்ததே—நாமே க்ஷவரம் பண்ணிக்கொள்ளப் போகப் பையனும் ஆரம்பிக்கிருன். இவனுக்கு எப்படிச் சமாதானம் சொல்வது.

பையன்:—ஓடிவந்து, இதோ அப்பா காசு, அப்பா இந்தா அப்பா, பண்ணிவிடப்பா, ...மாட்டயே,

தகப்பன்:—அடே எனக்குப் பண்ணிக்கொள்ளத் தெரியும்—உனக்குப் பண்ணிவிட எனக்குத் தெரியாதுடா—அம்பட்டன் வரட்டும்.

பையன்:—நீ பண்ணிவிடாதபோனயோ—பாத்துக்கோ—உன் சிகரெட்டுப் பொட்டி என்னிடம் ஆம்புட்டிருக்கு—குடுக்கிறேனுபாரு—நீ கெஞ்சினுலும் குடுக்கமாட்டேன், பாத்துக்கோ.

தகப்பன்:—போடாமுட்டாள். போ—

பையன்:—போப்பா, நீதான் முட்டாள். எனக்கு க்ஷவரம் பண்ணிவிடத் தெரியாத அப்பா, நீ என்ன அப்பா? இருக்கட்டும். நீ பண்ணிவிடாமற்போனால் போ—நான் அம்மாவிடம் போய்ச்சொல்லி அம்மாளே பண்ணிவிடச் சொல்றேன்—என்று சொல்லிக் கொஞ்ச தூரம்போய் "அப்பா, இதோ சிகரெட்பொட்டி. தரேனு பாரு" என்று பெட்டியைக் காட்டிவிட்டு ஓடிவிட்டான்.

யுக்தியே சித்திதரும்.

அக்பர் சமஸ்தானத்தில் ஒருநாள் பெரிய வாதம் நடந்துகொண்டிருந்தது. அப்போது அக்பர் ஒரு நேர்க் கோட்டைத் தரையில் கிழித்து, பிரமுகர்களைப்பார்த்து "இந்தக்கோட்டில் ஒரு சிறிதும் அழிக்காமல் இதைச் சிறிதாகச் செய்யவேண்டும்; எப்படிச்செய்வது" என்றுகேட்டார். பிரமுகர்களெல்லோரும் "அது எப்படிமுடியும்? முடியாதகாரியம்" என்று விழித்தார்கள். பிர்பால் என்னும் விதூஷகர் எழுந்துவந்து அந்தக் கோட்டுக்குச் சற்றுமேலே அதைவிட நீளமாக ஒரு கோடுகிழித்து அக்பரைப்பார்த்து "பிரபோ, இப்போது பாருங்கள், தாங்கள் கிழித்தகோடு சிறிதாகப் போய்விட்டது" என்றார். பிரமுகர்கள் வியப்படைந்தனர். அக்பர் விதூஷகரின் யுக்திக்கு மெச்சி மகிழ்ந்தார்.

THE TATA PRINTING WORKS, 5, THAMBU CHETTY ST., MADRAS.

ஸ்ரீகௌரி பானம்ருதம்

காப்பிக்குப்பதிலாக உபயோகிப்பது.

நம்தேசத்து மூலிகைகளின் கிழங்குகள் வித்துக்கள், புஷ்பங்களால் தயாரிக்கப்பெற்றது காப்பியைப்போலவே ருசியும் மணமும் உள்ளது ஒரு முறை உபயோகித்தவர்கள் மேலும், மேலும் உபயோகிக்க விரும்புவார்கள்.

இதன் அரிய குணங்கள்

ரக்தசுத்தி, பித்தசாந்தி, உஷ்ணசாந்தி உண்டாக்கி மலச்சிக் கலநீக்கி, பசிதீபனத்தை கொடுக்கும், இருதயம், மூளை இவைகளுக்கு பலத்தைக் கொடுக்கும், ஞாபக சக்தி, ஆரோக்கியம் இவைகளை விருத்தி செய்யும். கணைச் சூடு, மூலச் சூடு, பித்த எரிச்சல், வாந்தி, மயக்கம், மேக வெட்டை, நீரிழிவு இவைகள் நீங்கும்.

டின் ஒன்றுக்கு விலை அணா 8.

டஜன் ஒன்றுக்கு விலை ரூபா 5—12—0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம் தெரிவிப்போருக்கு 1922-ம், வருஷ காலண்டருடன் முழுவிபரமடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

விலாசம் :—டாக்டர், வி. ஆர். சுந்தரம்,
ஆயுர்வேத வைத்தியமந்திரம்,
363, பைகிராப்ட்ஸ் ரோட்டு, ராயப்பேட்டை, சென்னை.

சில அருமையான புத்தகங்கள்

வள்ளி நாயகி	0 12 0	சிவராத்திரி புராணவசனம்	1 8 0
மகா பாரதம் வசனம். 4-வால்யம் ...			15 0 0
பண்டித நடேசசாஸ்திரியார் ராமாயண வசனம்			15 0 0
சூதசங்கிதாசாராம்ருத வசனம்			1 8 0
தாயுமானவர் உரையுடன்	4 0 0	ஆநந்தராமாயணம்	5 0 0
ராமகிருஷ்ண விஜயம்	1 4 0	ஔவை அருந்தமிழ்	0 12 0
விவேகாநந்த விஜயம்	1 8 0	விநோதரசமஞ்சரி	2 0 0

சில புதிய நாவல்கள்.

தனபாக்யம் ...	2 0 0	விஜயபாஸ்கரன்	2 0 0
விக்ரமசிங்கன் கோட்டை	1 0 0	ரத்னபுரி ரகசியம்	3 8 0
அதிசயபொக்கிஷம்	1 8 0	வரதசுந்தரம் ...	2 0 0
தனபாலன் ...	2 0 0	கல்பலதா ...	1 4 0
கற்கோட்டை ...	2 0 0	ரோஜா ...	0 12 0

பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு பிப்ரவரி௴ முடிய ரூபாவுக்கு ஒரு அணாவீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

4-வது ஆண்டு பிறந்துவிட்டது!

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

இது குழந்தைகளின் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு வெளியிடப்பட்டுவரும்

சித்திரப் படங்களுடன் கூடிய
ஒரு சிறந்த மாதாந்தப் பத்திரிகை

இதன் ஆசிரியர்
வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதி

சந்தாவிபரம்.

வருஷசந்தா உள்நாடு ரூ. 1 8 0	வெளிநாடு ரூ.	2 0 0
மாதிரிப்பிரதி ...	,,	0 2 0
1, 2, 3-பைண்டு வால்யம் கலிகோ தங்கக் கில்டுடன் கூடியது ஒவ்வொன்றும் விலை	ரூ.	2 0 0
பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம்	ரூ.	1 12 0

விலாசம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
ராயப்பேட்டை போஸ்ட், சென்னை.